# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
## 2016 / 2017 (யூன் - 2019)

**HYS: 4143 International Relations**
**HYS: 4143 சர்வதேச தொடர்புகள்**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும், இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

### பகுதி - I

1. அ) சர்வதேச தொடர்பு ஒரு நாட்டிற்கு ஏன் அவசியமானது எனக்கூறி அதன் சிறப்பம்சங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ) சர்வதேச தொடர்புகளை முன்னெடுப்பதில் எதிர்நோக்கும் சவால்கள் எவை? (10 புள்ளிகள்)

2. "முதலாம் உலக யுத்த முடிவில் உலக சமாதானத்தையும் சர்வதேச தொடர்புகளை வலுப்படுத்துவதனை நோக்காகக்கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பே சர்வதேச சங்கமாகும்" இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   அ) சர்வதேச சங்கத்தின் உருவாக்கமும் அமெரிக்காவின் இராஜதந்திரமும் (10 புள்ளிகள்)

   ஆ) சர்வதேச சங்கத்தின் தோல்வியும் இரண்டாம் உலக யுத்தமும் (10 புள்ளிகள்)

3. "இரண்டாம் உலகப்போரின் பின்னர் சர்வதேச தொடர்புகளை முன்னெடுப்பதில் சவாலாக அமைந்தது பனிப்போராகும்" இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

   அ) அமெரிக்காவும் நேட்டோ அமைப்பும் (10 புள்ளிகள்)

   ஆ) சோவியத் ரஷ்யாவும் வார்சோ அமைப்பும் (10 புள்ளிகள்)

### பகுதி - II

4. சர்வதேச தொடர்புகளை வளர்த்தெடுப்பதில் உலக வங்கியின் (World Bank) வகிபங்கினை அதன் தோற்றம், வளர்ச்சி, சாதனைகளை மதிப்பீடு செய்க. (20 புள்ளிகள்)

5. இலங்கை - சீன நாட்டுப் பரஸ்பர நல்லுறவினால் முன்னெடுக்கும் அபிவிருத்திப் பணிகள் மற்றும் அதன் விளைவுகளினால் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து ஒரு விபரணக் கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

6. “சர்வதேச தொடர்புகளை இராஜதந்திர ரீதியில் வளத்தெடுப்பதில் அமெரிக்காவின் வகிபங்கு குறிப்பிடத்தக்கது” இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை இருபதாம் நூற்றாண்டு வரலாற்றுச் சம்பவங்களினூடாக நுணுகி ஆராய்க. (20 புள்ளிகள்)

7. சர்வதேச தொடர்புகளை நாடுகளுக்கிடையில் வளர்த்தெடுப்பதில் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனித உரிமைகள் பேரவையினால் முன்னெடுக்கப்படும் பணிகள் குறித்து கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)